வாழ்வாங்கு வாழ நெறிமுறைகள்



மக்களே, வாழ்வாங்கு வாழ
மனதில் உறுதி வேண்டும். (மக்களே...)

மன உறுதியோடு உழைத்தால்
எதிலும் வெற்றி பெறலாம். (மக்களே...)

ஏழைகளுக்கு உதவி செய்ய
நல்ல மனவலிமை பெறல் வேண்டும். (மக்களே...)

நன்கு பேசவும், நல்லதையே
பேசவும் மனசாந்தி வேண்டும். (மக்களே...)

பிறரைப் பாராட்டுதல் நல்லது, இதற்கு
மனதில் நல்ல எண்ணம் வேண்டும். (மக்களே...)

பிறருக்குக் கெடுதலைச் செய்யாதே,
நினைக்காதே, உன் மனம் நிம்மதி பெறும். (மக்களே...)

பிறரை நீ மகிழ்விக்க வேண்டும்.
உன் மனமும், வாழ்க்கையும்
இன்பமடையும். (மக்களே...)



உலக மக்களே, நீங்களும் வாழவேண்டும்
மற்றவர்களையும் வாழ விடுக. (உலக...)

மக்கள் குறையில்லா வாழ்வு
வாழவேண்டும். (உலக...)

மங்கள வாழ்வு அனைவரும்
வாழவேண்டும். (உலக...)

மக்கள் துன்பம் இல்லா நல்வாழ்வு
வாழவேண்டும். (உலக...)

மக்கள் நோய் இல்லா சுகமான
வாழ்வு வாழவேண்டும். (உலக...)

மக்கள் வாழையடி வாழையாக
இன்புற்று வாழவேண்டும். (உலக...)

மக்களே, தாய் தந்தையரைப் போற்றுங்கள்
காப்பற்றுங்கள். உங்களுக்கு நல்லது நடக்கும். (உலக...)



உலக மக்களே, எல்லாம் இன்பமயம் என வாழ
திருக்குறளில் உள்ள அறநெறிப்படி வாழ்க. (உலக...)

எதை ஆரம்பித்தாலும் கடவுளின் துணையோடு
செய்க. இனிமையாக அமையும். (உலக...)

பிச்சை எடுத்தாவது கல்வி கற்க.
அதுவே வாழ்க்கைக்கு இனியது. (உலக...)

பெரியோரைத் துணைகொண்டு அவரைப்
பின்பற்றி வாழ்தல் இனியது. (உலக...)

மற்றவர்கள் முன் கையேந்தாமல் உன் சொந்த
உழைப்பால் வாழ்தல் இனியது. (உலக...)

படித்த அறநூல்படி வாழ்தலும், கோயிலுக்குச்
சென்று வழிபட்டு வாழ்தலும் இனியது. (உலக...)

மிகச்சிறந்த அறிவுடையோர் கூறும்
வழியில் சென்று வாழ்தல் இனியது. (உலக...)

தாய் தந்தையரைப் போற்றுதலும்
காப்பாற்றுதலும் இனியது. (உலக...)



தூய நல்ல சொற்களைப்
பேசுதல் இனிமை. (தூய....)

சிறந்த கற்றோர் கூறியதையும் அறிந்தவற்றையும்
பின்பற்றி வாழ்தல் இனிமை. (தூய...)

துன்பங்கள் வரும்போது துவண்டு போகாமல்
அதைத் துணிவுடன் எதிர்கொண்டு வாழ்தல் இனிமை.(தூய...)

அறிவில்லாத மக்களின் குற்றங்களைப்
போக்குதல் இனிமை. (தூய...)

அறிவில்லாத மக்களுக்கு நற்குணங்களை
அறிவுறுத்தி நல்லவர்களாக ஆக்குதல் இனிமை. (தூய...)

பாதுகாப்பு இல்லாத மக்களுக்கு
பாதுகாப்பு அளித்தல் இனிமை. (தூய...)



உலக மக்கள் எல்லோரும் அமைதியாக வாழ
அமைதிப் பணிகளைச் செய்தல் இனிமை. (உலக....)

மக்களுக்கு நல்ல அறப்பணிகளைச் செய்து
இன்பமாக வாழச் செய்தல் இனிமை. (உலக....)

மக்களுக்கு ஆன்மிகத்தைப் போதித்து அவர்களையும்
முக்தி அடையும்படி செய்யும் அருட்பணி இனிமை. (உலக....)

மற்றவர்களுக்கு உதவுதல், தான
தருமம் செய்தல் இனிமை. (உலக....)

கல்வியில் சிறந்த மகனையே
தாயும் அதிகம் விரும்புவாள். (உலக....)

கல்வியில் சிறந்தவனையே அரசனும்
முதலில் வரவேற்பான். (உலக....)

கல்வியில் சிறந்தவன் காட்டிய வழியிலேயே
அரசனும் செல்வான். இவை இனிமை. (உலக....)

கல்வியைக் கற்பது எல்லோருக்கும் நன்மை
பயக்கும். மேலும் இனிமை. (உலக....)

நல்ல நூல்களில் காணப்படும்
சொல்வன்மையின் அழகும் இனிமையும் ஆகும். (உலக....)



ஒழுக்கத்தில் நிலைபெற்று வாழ்தல்
மேலானது, இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

கற்றதை மறவாது இருத்தல்
மேலானது, இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

கற்ற பெரியோரைப் பின்பற்றி நடத்தல்
மேலானது, இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

ஒருவரை குருவாக ஏற்றுக்கொண்டு
அவரை வணங்கி அவர்
அருள்வாக்குப்படி வாழ்தல் மேலானது,
இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

நன்மையே செய்யும் குரு போன்ற பெரியோரின்
அருள்வாக்குப்படி வாழ்தல் மேலானது,
இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

பகைவருக்கு அஞ்சாமல்
வாழ்தல் மேலானது, இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

நிறைந்த கல்வி அறிவானது,
எதிரிகளையும்கூட நல்வழிப்படுத்தும்.

இது நம் வாழ்வுக்கு மேலானது,
இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

நல்லவர்களாக வாழ்ந்தால்,
சொல்வன்மை தானே வரும்.
இது நம் வாழ்க்கைக்கு மேலானது,
இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

நமது வெற்றிக்குத் தக்க காலம்
அறிந்து வாழ்தல் மேலானது.
இனிமையானது. (ஒழுக்கத்தில்....)

கல்வி அறிவால் காமம், வெகுளி,
மயக்கம், ஆகியவற்றிலிருந்து விடுபட்டு
வீடுபேறு பெறலாம்.
இதுவே மேலானது. இனிமையானது. (ஒழுக்கத்தில்....)



உலக மக்களே, நம் வாழ்வானது மற்றவர்களுக்கு
உதாரணமாகத் திகழவேண்டும். (உலக.....)

மக்களே, பிறரை குறை கூறக்கூடாது.
நம் வாழ்வு மேலோங்கும், (உலக.....)

நாம் மற்றவர் நலனில் அக்கறை கொள்ளவேண்டும்.
அதுதான் சிறப்பு. (உலக.....)

எல்லோரும் மனிதநேயமுடன் நடந்துகொள்ள வேண்டும்.
இதுவே சிறந்த செயல். (உலக.....)

நல்ல சிந்தனையால் தூய வாழ்வு நடத்தவேண்டும்.
இம்மாதிரி வாழ்ந்தால் மனதில் அபார ஆற்றல் பிறக்கும்.
(உலக.....)

மற்றவர்கள் நல்ல கருத்துகளுக்கு மதிப்பும்,
மரியாதையும் அளிக்க, பணமும் சக்தியும் பெருகும். (உலக.....)



உலக மக்களே, பிறருக்கு உதவி செய்து மகிழவேண்டும்.
இம்மாதிரி வாழ்ந்தால் வருமானம் பெருகும். (உலக.....)

விதியை மதியால் வெல்லலாம். இதை உணர்ந்து
நடந்துகொண்டால் நாம் சிறப்பாக வாழலாம். (உலக.....)

காலத்தைப் பொன்னாக மதித்து வாழவேண்டும்
இம்மாதிரி வாழ்ந்தால் எதிலும் வெற்றி பெறலாம். (உலக.....)

மற்றவர் குறையை மன்னிக்க வேண்டும். இம்மாதிரி வாழ்ந்தால்
நமக்கு ஆன்மிகத்தில் வளர்ச்சி உண்டாகும். (உலக.....)

நட்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்
நமக்கு நல்ல அமோக ஆதாயம் கிடைக்கும். (உலக.....)

நாம் பணிவாக நடந்தால் வாழ்வில்
உயர்ந்து விளங்கலாம். (உலக.....)

நாம் பணிவுடனும் மரியாதையுடனும் வாழ்ந்தால்
நமக்கு அரசுவகையில் ஆதாயம் கிடைக்கும். (உலக.....)



மக்களே, நீங்கள் உயர்ந்த நல்ல இலட்சியத்தை
மனதில் கொண்டு வாழுங்கள். வெற்றி உண்டு. (மக்களே.....)

பிறர் நம்மைப் பாராட்டினாலும், இகழ்ந்தாலும்
நம்முடைய மகத்தான செயல்களை விட்டு விலகாதே.
(மக்களே.....)

சோம்பேறித்தனம் இல்லாமல் சுறுசுறுப்பாக வாழ்ந்தால்
நம் இலட்சியம் வெற்றி பெறும். (மக்களே.....)

பகைமையும் பொறாமையும் கொள்ளாமல்
வாழ்ந்தால் செல்வந்தனாக வாழலாம். (மக்களே.....)

நீ பட்ட துன்பம் அதிகம். ஆனாலும் அதனால்
நீ கற்ற அனுபவப்பாடம் உன்னை உயர்த்தும். (மக்களே.....)

நீ முதலில் கீழ்ப்படிந்து நடப்பதைக் கற்றுக்கொள்.
பிறகு உனக்கு அதிகாரத்தைச்
செலுத்தக்கூடிய பதவி தானே கிடைக்கும். (மக்களே.....)

பெண்குழந்தைகளைக் கல்வியிலும்
பண்பாட்டிலும் சிறக்கச் செய்யுங்கள்.
வீடும் நாடும் மேலும் முன்னேறும். (மக்களே.....)



வாய்மையே வெல்லும். உண்மையே பேசுக.
உண்மையை கடைப்பிடித்து வாழ்க. (வாய்மை....)

"கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில்." எனவே
பொய் யாரையும் வாழவிடாது. (வாய்மை....)

வெற்றி பெற, அறச் சிந்தனையுடனும்,
நம்பிக்கையுடனும், அமைதியுடனும் வாழ்க. (வாய்மை....)

வாழ்வில் மன உறுதியோடு நடைபோடுங்கள்.
லட்சியம் தானே நிறைவேறும். (வாய்மை....)

தூய்மையான மனத்தையும் நல்ல சிந்தனையையும்
கொண்டால் மனதில் இன்பம் பொங்கும். (வாய்மை....)

கடமையுடனும், கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும்
வாழ்ந்தால் உரிமை தானே வரும். (வாய்மை....)

நேரத்தை வீணாக்காமல் வாழ்ந்து பாருங்கள்.
வெற்றி தானே வரும். (வாய்மை....)



மக்களே, நம் வாழ்வை இனிமையாக்கிக்
கொள்ள நல்ல எண்ணம் வேண்டும். (மக்களே....)

ஊருக்கு நல்லதைச் செய்தும், மற்றவர்களுக்கு உதவி செய்தும்
வாழ்ந்தால் மனதில் நிம்மதி தானே வரும். (மக்களே....)

இராமாயணம் வெறும் கதை அல்ல.
அது நல்வாழ்வுக்கான நெறிகள். (மக்களே....)

இராமர் நல்லவர், இராவணேஸ்வரன் தீய எண்ணம்
கொண்டவர். எனவே அழிவு நேர்ந்தது. (மக்களே....)

உன் வாழ்நாள் நீடித்து இருப்பதற்கு
தாய் தந்தையைப் பெருமைப்படுத்து, காப்பாற்று. (மக்களே....)

கொலை முதலிய பாவச் செயலைச்
செய்தால் தண்டனை. (மக்களே....)

கடவுள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து வரும்
தூய பக்தியைத்தான் விரும்புகிறார். (மக்களே....)

ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் கடவுளின்
இடத்தில் இல்லை. மக்களில் சிலபேரிடம் உண்டு.
(மக்களே....)



மக்களே, நாவில் சத்தியமும்
மனதில் இரக்கமும்,
நல்லதையே செய்தாலும்
இறைவனின் அருள் துணை நிற்கும். (மக்களே....)

காசி, கைலாசம் செல்வதும் சிறப்புதான்.
ஆனால் அதைவிட மற்றவர்களுக்கு
நல்ல செயல் செய்தலையே
இறைவன் ஏற்று அருளுகிறான். (மக்களே....)

பிரபஞ்சம் பஞ்ச
பூதங்களின் சேர்க்கை. (மக்களே....)

நீர், நிலம், நெருப்பு, காற்று ஆகிய
ஐந்தும் பஞ்ச பூதங்கள். (மக்களே....)

மனதில் அழுக்கு இருந்தால் இறைவனைத்
துதித்து வந்தால் நலமாகும். (மக்களே....)

நேரத்தை வீணாக்காமல் ஆன்மிகத்தில்
ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தினால்
காலன் வரும் தேதியை தள்ளிப் போடலாம். (மக்களே....)



ஆன்மிகத்தில் ஈடுபட்டு தூய மனத்துடன் இறைவனை
வேண்டுதலே மேலான செல்வம். (ஆன்மிகத்தில்....)

மகத்தான சக்தி மனதில் இருந்தால்தான்
மன்னிக்கும் குணம் மேலோங்கும். (ஆன்மிகத்தில்....)

எல்லா உயிர்களிடத்திலும் கருணை காட்டுதலே
மிக உயர்வான குணம். (ஆன்மிகத்தில்....)

மன அமைதியுடன் வாழ்க்கை நடத்தினால்
எப்போதும் இன்பம் பெருகும். (ஆன்மிகத்தில்....)

மிகவும் பணிவும் எளிய வாழ்க்கையையும்
கொண்டவர்கள் தெய்வீகமனம் கொண்டவர்கள்.
(ஆன்மிகத்தில்....)

முற்பகலில் தீங்கு விளைவித்தால்
அத்தீங்கு பிற்பகலில் தானே விளையும்.
எனவே தீங்கு செய்யாதீர்கள். (ஆன்மிகத்தில்....)



மக்களே, தூய்மையாக வாழ்வதையே
இறைவன் விரும்புகிறார். (மக்களே....)

நேர்மையோடு வாழ்க்கையை
நடத்தினால் எதிலும் வெற்றி. (மக்களே....)

கற்புடைமை தவறாது வாழ்க்கை நடத்தினால்
துன்பம் இல்லாமல் இன்பமாக வாழலாம். (மக்களே....)

எல்லா உயிர்களிடத்திலும் இரக்க குணத்துடன்
வாழ்ந்தால் உலகோர் பாராட்டுவர். (மக்களே....)

தன்னடக்கத்துடன் வாழ்க்கை நடத்தினால்
அழகுடனும் சிறப்புடனும் வாழலாம். (மக்களே....)

இறைவனை சரணாகதி அடைந்து நாம சங்கீர்த்தனம்
பாடித் துதித்தால் எல்லாவற்றையும் அருளுவார்.(மக்களே....)

நல்லதோர் குடும்பவாழ்க்கையை
உலகமக்கள் பாராட்டுவர். (மக்களே....)



இன்பமான வாழ்க்கை அமைய எதிலும்
உறுதியான நம்பிக்கை வேண்டும். (இன்பமான.....)

குருவினிடத்திலும் இறைவனிடத்திலும்
நல்ல நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால்
வாழ்க்கை வெற்றி பெறும். (இன்பமான.....)

நாம் எப்போதும் விழிப்புடன்
சுறுசுறுப்பாக வாழ்ந்தால் இன்பமே. (இன்பமான.....)

கவலை இல்லாமல் வாழ குருவின்
உபதேசங்களைப் பின்பற்றியும் தூய பக்தியுடனும் வாழ்க.
(இன்பமான.....)

சோகம் இல்லாமல் புன்சிரிப்புடனும்,
வலிமையுடனும் இருந்தால் இன்பம் தானே வரும்.
(இன்பமான.....)

எந்தப் பிரச்சனையானாலும்
நாம் அதை எப்போதும்
நல்ல புன்னகையுடனும், இன்முகத்துடனும்
எதிர்கொண்டு வாழவேண்டும். (இன்பமான.....)



மக்களே, "சிக்கனம் வீட்டைக் காக்கும் சேமிப்பு
நாட்டைக் காக்கும்." சிக்கனமாக வாழ்க. (மக்களே....)

மக்களே, ஏமாளியாய்
இருக்கக் கூடாது. (மக்களே....)

வாழ்வில் எதிலும் அலட்சியம் கூடாது,
அதுவே முன்னேற வழி. (மக்களே....)

எதிலும் நாம் விழிப்புடன் இல்லாவிட்டால்
உலகம் நம்மை ஏமாற்றிவிடும். (மக்களே....)

எவரும் மறதி கொள்ளக்கூடாது.
மறதியால் நேரம் வீணாகும். (மக்களே....)

ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் செய்தால்
வெற்றி தரும். (மக்களே....)

"சுத்தம் சோறு போடும்." எனவே
மனத் தூய்மை, உடல் தூய்மை,
ஆடைகள் தூய்மையாக இருந்தால்
கடவுளுக்குப் பிடிக்கும். (மக்களே....)

நேரத்தையோ, பணத்தையோ சாப்பாட்டையோ,
எதையுமே வீணாக்கக் கூடாது. (மக்களே....)

தரித்திரம் ஒருவனுக்குத் துன்பம் தரும்.
எனவே எதிலும் நன்றாக இருந்தால்
லட்சுமியின் அருள் உண்டு. (மக்களே....)



எதிலும் ஒழுங்குமுறை இருந்தால்
வாழ்க்கையும் இன்பமயமாகும். (எதிலும்....)

நாம் வாழுமிடமும், நம் அறையும், நாம் வாழும்
முறையும் ஒழுங்காக இருக்க வேண்டும். (எதிலும்....)

நம் வாழ்வில் சின்ன சின்ன விஷயத்தையும்
நுணுக்கமாக கவனிக்க வேண்டும். (எதிலும்....)

எல்லாவற்றிலும், அன்றாட வாழ்க்கை முறையில்
ஒழுங்கு இருக்க வேண்டும். (எதிலும்....)

ஆன்மிக வாழ்வில் நேர்மையாகவும்
ஒழுக்கத்துடனும் ஒழுங்காகவும் ஈடுபட்டால்
கடவுளின் அருள் எளிதில் கிடைக்கும். (எதிலும்....)

நாம் எதற்கும் பிறரை அண்டி வாழாமல்
சொந்தக் காலில் நிற்கவேண்டும். (எதிலும்....)

நாம் செய்யும் எல்லாச் செயல்களிலும்
கடவுளின் நினைவாகவே செய்யவேண்டும். (எதிலும்....)

நாம் சாப்பிடும் உணவை கடவுளுக்குப் படைத்து
அதை கடவுளின் பிரசாதம் என்று உண்ண வேண்டும்.
(எதிலும்....)

நாம் எதைச் செய்தாலும் முழுமனத் திருப்தியுடன் செய்தால்
கடவுள் அருளும் பாராட்டும் கிடைக்கும். (எதிலும்....)



மக்களே, நாம் வாழ்க்கையில்
படிப்படியாக முன்னேற வேண்டும். (மக்களே....)

இன்னும் முன்னேற நாம்
சிந்தனை செய்ய வேண்டும். (மக்களே....)

நாம் செய்யும் சிந்தனையிலும் வாழ்விலும் வெற்றிபெற
பேச்சும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். (மக்களே....)

நாம் கற்ற கல்வி அறிவாலும்,
அறிஞர்கள் சொன்னபடி நடந்தும்
நாம் சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும். (மக்களே....)

பரிகாசத்திற்கும், எதிர்ப்பிற்கும் செவிசாய்க்காமல்
சரியாகச் செய்யும்போது தானே பாராட்டுவார்கள். (மக்களே....)

முயன்று நல்லதையே செய்தால் வருங்கால
சமுதாயத்துக்கும் செய்தவன் ஆகிறோம். (மக்களே....)

நல்லவை எல்லாம் அடுத்த
தலைமுறைகளுக்கு உதவும் எனச் சொல்லுக. (மக்களே....)

எதையுமே நாம் சரியான நேரத்தில்
ஆரம்பித்துச் செய்யவேண்டும். (மக்களே....)

சரியான நல்ல செயல்கள் நல்லவிதமாக
லட்சியத்தை நோக்கி வெற்றி பெறும். (மக்களே....)

நாடும் நாட்டு மக்களும் நல்ல பயன்களைப்
பெற நாம் பாடுபட வேண்டும். (மக்களே....)



உலகுக்கெல்லாம் தாயும் தலைவியும்
பார்வதி தேவியே. (உலகுக்....)

அலைமகளும் கலைமகளும்
பார்வதி தேவியே. (உலகுக்....)

சிவபெருமானின் கழுத்தில் விஷத்தை
நிறுத்திக் காத்தவர் பார்வதி தேவியே. (உலகுக்....)

மிகப் பேரழகியாகத் திகழ்பவர்
பார்வதி தேவியே. (உலகுக்....)

சப்தமாதர்களில் வராகியாகத்
திகழ்பவரும் பார்வதி தேவியே. (உலகுக்....)

சூலம் தாங்கி இருந்து
காப்பவரும் பார்வதிதேவியே. (உலகுக்....)

மாதங்க முனிவரின் மகள்தான்
பார்வதி தேவி. (உலகுக்....)

பார்வதி தேவியே போற்றி போற்றி. (உலகுக்....)

பார்வதி தேவியை நாம் எல்லோரும்
சரணடைந்து நல்வாழ்வு வாழலாம் வாரீர் வாரீர். (உலகுக்....)